# மெட்ரோ ரயில்களின் சேவை இன்று முதல் நீட்டிப்பு

■ சென்னை

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

பயணிகளின் கோரிக்கையை ஏற்று மெட்ரோ ரயில் சேவையின் நேரம் மீண்டும் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சென்னை மெட்ரோ ரயில்கள் திங்கள் முதல் சனிக்கிழமை வரை தினமும் அதிகாலை 5.30 மணி முதல் இரவு 11 மணி வரையில் இயக்கப்படும். அலுவலக நேரங்களில் (பீக் அவர்ஸ்) 7 நிமிட இடைவெளியிலும் மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியிலும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

இதேபோல், ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களில் காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை மெட்ரோ ரயில்கள் இயக்கப்படவுள்ளன. கரோனா வைரஸ் பரவலைத் தடுக்க மெட்ரோ மெட்ரோ ரயில் நிறுவனம் பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.